110

மேரி மக்தலேனா

பாடல்கள்

140

1804

புண்ணிய நெருப்பில் பாவம் கருகியது;
கடவுட் காட்சியில் காமம் மறைந்தது.

20 APR 1945
MADRAS

ஆசிரியர்:
பாலபாரதி
ச. து. சுப்பிரமணிய யோகியார்

ஸ்டார் பிரசுரம்
பாலக்கரை, திருச்சினாப்பள்ளி (H. O)

★

மேரி மக்தலேனுவின் பெண்மை, அழ
கின் ஜ்வாலே, காமக்கனலின் புகை
மண்டிய சித்திரங்கள்—

ஏசுவின் அருட்சோதியில், மக்தலேனு
தீய வழியை மறந்து, புனித
மடைகிருள்.

ஸ்ரீ யோகியாரின் நவீன எழில் நிறைந்த
மின்னற் கவிதை
சிருஷ்டி மெருகுடன் வளர்கிறது!

★

STAR PUBLICATIONS
Palakarai :: Trichinopoly (H O)

மேரி மக்தலேனு

பாடல்கள்

புண்ணிய நெருப்பில் பாவம் கருகியது;
கடவுட் காட்சியில் காமம் மறைந்தது.

ஆசிரியர்:
பாலபாரதி
ச. து. சுப்பிரமணிய யோகியார்

ஸ்டார் பிரசுரம்
பாலக்கரை, திருச்சினுப்பள்ளி (H. O)

NO. 16 (A) MARY MAGDALENE

[Spiritual Poem] Second Edition

April — 1945.

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் — இறைவனே
எந்தா யெனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான்"

— காரைக்காலம்மையார்

(COPYRIGHT)

STAR PUBLICATIONS

PALAKARAI TRICHINOPOLY (H. O)

விலை. ரூ. 0—12—0

PRINTED AT THE KUMARAN POWER PRESS-KARAIKUDI

மக்தலேன மரியம்

ஆசிரியர் முன்னுரை

அவள் ஒரு தாசி.
உடலை விற்று உயிர் வாழ்ந்தாள்.
அவள் பேரழகி.
அழகால் அனைவரையும் அடிமையாக்கினாள்.
ஒரே வார்த்தையில்,
அவள் அழகின் எல்லை, அன்பின் பாசாங்கு,
இன்பத்தின் ஏமாற்று.

2

அவர் தேவன்,
தெய்வங் கண்ட தேவகுமாரன்,
அவரும் அழகன் தான்.
ஆனால், அவ்வழகு ஆன்மீக அழகு, அமைதியின்
சைதன்யம், அன்பின் சாட்சாத்காரம்,
இன்பத்தின் சம்பூர்ணம்.

3

அழியும் அழகு, அழியா அழகைக் கண்டது.
அன்பின் பாசாங்கு அமைதியின் அற்புதத்தைச்
சந்தித்தது.
இன்பத்தின் ஏமாற்று, இன்ப நிலையமாய்
ஈஸ்வரனை ஏறிட்டு நோக்கியது.
பாவத்தின் கருநிழல், புண்ணியத்தின்
பொன்னொளியால் பரவசமுற்றது.

20 APR 1945
1804
894.8111

03[,1

4

மேல் நடந்தது என்ன?
புண்ணிய நெருப்பில் பாவம் கருகியது.
கடவுட் காட்சியில் காமம் மறைந்தது.
உயிரின் மலர்ச்சியில் உடலம் கரைந்தது.

5

அவள் பெயர் மேரி,
அவள் அவரைக் கண்டாள்,
அடைக்கலம் புகுந்தாள்,
அமரத்வ மடைந்தாள்.

6

அவர் பெயர் ஏசு,
உலகைக் காக்க வந்த உத்தமன்,
உடலாகிய கிண்ணியில் உயிராகிய தேனைப்
பாய்ச்சும் உன்னதமான வான்மலர்.

அவர் வாழ்க,
அவர் அடிமையான மேரி வாழ்க,
யாவரும் வாழிய.

10—4—1945 ஸ்ரீ யோகியார்.

★

மேரி மக்தலேனா

காட்சிப் படலம்

1

மதியினைச் சுண்ணம் செய்து
வானவில் வர்ணம் தீட்டிக்
கதிர்மணி விளக்கம் தூக்கிக்
ககனமீன் சரத்திற் கோத்துப்
புதியமின் சிகரம் வேய்ந்து
பொன்சுடர் பளிங்கில் தூண்கள்
அதிசயக் காமன் வைகும்
அரண்மனை போன்ற மாதோ.

2

மதுகரம் மொய்க்கும் சோலை,
மதுச்சுனை யூறும் ஓடை,
சுதிபெறு குயிலின் கூட்டம்,
தூயவெண் சலவைக் கூடம்,
குதுகலத் தென்றல் வீச்சு,
குளிர்மதுக் கனியின் கொத்து,
விதவிதச் சிற்பக் காட்சி
விண்ணெலாம் பணியும் சூழ்ச்சி.

3

சந்திரன் தவழும் இன்பத்
தவள சாகரம் போல் முற்றம்,
சிந்துரக் கிரணக் கூர்மைத்
தினகரன் தீட்டும் சாணை,
இந்திரன் மனையை வெல்ல
எழுந்து வான் கூடும் மாடம்,

வந்துவந்து அணைத்துப் பெற்ற
மையலால் வறிகொள் வீடு.

4

ஓவியம் இமைகள் மூடாது
உயர்மனை எழிலை நோக்கும்,
காவியம் கண்கள் மூடிக்
கனவுகண்டு அளந்து பார்க்கும்,
ஆவியை ஊற்றினாற் போல்,
அமுதத்தைப் பாய்ச்சினாற் போல்,
மேவிய சுவர்கள் எல்லாம்
மீனினம் நுழைந்தங் கார்க்கும்.

5

பவளத்துச் சட்டம் சூழ்ந்து
பரிதியைக் குடிக்கும் ஜோதித்
தரளத்தை வார்த்துச் செய்த
சாளரந் தோறும் சத்தத்
தவளத்தில் மென்பூத் தைத்த
தளிரினும் மெலிய பட்டில்
குவளைக் கண் மாதர் கைப்பூக்
கும்பிட்டுக் குலுங்கும் சேலை.

6

மாணிக்கக் கதவ மெல்லாம்
மணிவிளக் கொளிகள் வீசும்,
வாணிக்கை மதுர வீணை
மந்த மாருதத்திற் பாயும்,
காணிக்கை யேந்தி நிற்கும்
கனிகளும் மலரின் கொத்தும்,
நாணிக்கண் சிமிட்டி மீன்கள்
நள்ளிருள் நடுவே பூக்கும்.

7

மண்ணுறு புண்ணியந்தான்
வானகம் ஏறிச் செல்லப்
பண்ணிய படிவமோ, இப்
பாரகத் தவத்தை மெச்சி
விண்ணருள் வியப்போ, காம
விஞ்சையோ, தழலிற் பாய்ச்சும்
பண்ணிசை ததும்பும் தெய்வப்
பதுமமோ, யாதைச் சொல்வாம்!

8

வாளரா விரியும் கூந்தல்
வாயிடை மதியம் போலச்
சாளரம் தோறும் தோன்றும்
தண்கதிர் முகங்கள் நோக்கி
வேளினைப் படைத்த திங்கள்
வெண்மகள் நாணி ஆங்கோர்
காளமா மேகப் பொந்தில்
கண்மறைந் திடுதல் காணாய்.

9

மின்னெனத் துவளும் மேனி,
வேயெனக் குழையுந் தோளில்
பொன்னெனக் கலசம் வீக்கிப்
பொய்யெனச் சரியும் காமன்
துன்னிய நிதம்பக் கோயில்
தோகை போல் சேடிமார்கள்
அன்ன மென் நடையராகி
ஆயிரம் பணி செய்வாரும்:

10

குடத்தினில் மதுப் பெய்வாரும்,
குடலையில் ·பூக்கொய்வாரும்,
தடத்தினை விளக்குவாரும்,
தளிரணை வகுக்கின்றாரும்,
மடத்தினைக் காமன் செங்கோல்
மாடத்தை அணி செய்வாராய்
விடத்திலில் அமுதம் கூட்டும்
விழியனார் உலவுகின்றார்.

11

தங்கத்துப் பாத்தி செய்து,
தரளத்தால் வரம்பு கட்டிப்
பொங்கொளிப் பங்கயம் போல்
புதுமணி பொறித்த தொட்டில்
எங்கணும் மலரின் கொத்தாய்
இலங்கிய சோலை நீங்கி,
மங்கல மணைபுக்கோ மேல்
மன்மதன் கோயில் புக்கோம்.

12

சந்தப்பூங் கலவைப் பன்னீர்ச்
சாகரம் குடையுவாரும்,
இந்துவைப் பிளந்த கிண்ணத்து
எழில் நறவு அருந்துவாரும்,
பந்துருள் கொங்கை மாதர்
பதுமக்கை வருடுந் தோறும்
மந்திரப் பாவை போல
மயக்கத்தில் திகைட்புற்றாரும்.

13

தூணெலாம், சுவர்க ளெல்லாம்,
தோய்மணித் தரைக ளெல்லாம்,
வாணிலாத் தழுவும் மாட
முகடெலாம், வயிரக் குன்றக்
கோணெலாம் கோடா் கோடி
மகளிரைக் கொடுப்ப நோக்கி
ஆணெலாம் மயங்கி, 'யாரே
ஆசை நோய் தீர்ப்பது!' என்பார்.

14

ஓவிய மெல்லாம் காம லீலையின்
உவகைத் துள்ளல்,
காவிய மெல்லாம் காதற்
கவிதைகள், மதனன் பாட்டு,
மேவிய சிற்பம் யாவும்
மீறிய கலவைக் காட்சி,
ஆவியைப் பற்று தந்தோ
யாவையும் மயக்கும் சூட்சி!

15

வீட்டினைச் சொன்னோம், அந்த
வீட்டினுக்கு உயிராம் இன்பப்
பாட்டினை, அமுதால் செய்த
படிவத்தை, மதனன் நாணில்
பூட்டிய புதிய மின்னை,
புன்னகைப் பெண்பால் தோன்றி
ஆட்டி இவ் வுலகை அள்ளும்
அழகினைச் சொல்ல வில்லை.

16

தண் கதிர் நிலவால் முற்றம்
பாற்கடல் சமைவதாகப்
பெண் கனி அமுதத்தோடு
பிறந்தவள் என்ன நின்ருள்;
விண் மணி யாவும் சூழ்ந்து
வியப்புற நோக்கித் தத்தம்
கண் மயக்குற்று வானக்
காவினில் அசையா நின்ற.

வேறு

வான்கோழிகள் இடையே ஒரு
மயிலாடுதல் போலும்,
மீன் பாடிய வானத்தொளி
மேவும் மதி போலும்,
தேன் பாடிய மலரின்னிடை
செந்தாமரை போலும்,
மான் பாடிய விழியாரிடை
மரியாள் எனும் ஒரு மான்.

18

மேகம் தவழ் மதிபோலிருள்
அளகந் தவழ் முகமும்,
வேகம் தவழ் அலை மேவிய
கடல் போல் உருள் விழியும்,
பாகும் தெளி தேனும் தவழ்
பவளக் கனி இதழும்,
மோகம் தரு தரளக் களி
இள மூரலின் முதிர்வும்;

19

தழல் பாய்ந்திடும் மின்னல் சுவை
செம்பொன் தளிர் மேனி,
கழல் பாய்ந்திடு காந்தள் சிறு
விரலின் கதிர் விரியும்,
குழல் பாய்ந்தொளி உண்ணும், இரு
கண்பாய்ந்திருள் கொல்லும்,
நிழல் பாய்ந்தவள் நேர்காண ஓர்
சுவரேறியே நிலவும்.

20

அன்னம் அவள் நடை கற்பன
அணி சோலையில் உலவும்,
சின்னஞ் சிறு குயில் அன்னவள்
இசை கற்பன திரியும்,
மன்னும் இள மான் அன்னவள்
விழி மாயையை மகிழும்,
இன்னும் சொலல் என்என் என
மின் சேவை செய் மின்னுள்.

21

வெய்யோன் ஒளி வெப்பம்தனை
விரிதேன் குளிர் நறவாய்
மையோவிய மதியக் கதிர்
மையல் தரு வெயிலாய்ச்
செய்யோவியம் அனையாள் இளஞ்
செங்காலன நடையாள்
சையோக மென் மதனுகம
சரசக் கலை வாணி.

22

வாடாக் கலை, குறையா திருள்
மறையாச் செழுந் திங்கள்,
மூடா இதழ், உதிராதளி,
மூசா இள முளரி,
ஓடா திருள் ஓயா தழல்
பாயா தொளிர் மின்னல்,
தேடாத் திரவியம் மான் விழி
தேனின் மொழி மயிலாள்.

23

காலில் சுவை, தலையில் சுவை,
கணுவில் சுவை காட்டிப்
பாலில் சுவை போல் எங்கணும்
பதியும் சுவைக் கன்னல்,
ஆலித் தெழும் அமுதக் கடல்
கடையத் திரள் வெண்ணெய்
போலொத்தது வெயிலில் பட
உருகாத் தளிர் மேனி.

24

காலம் அவள் பொன் மேனியில்
கணமோர் எழில் காட்டும்,
ஞாலம் அவள் பாதத்திடை
நவமா மணி சொரியும்,
வாலைப் பருவக் காளையர்
வசமற்றவர் உளரோ?
சோலைத் தரு சுனை யாவையும்
சொக்கும் திரு உருவம்.

25

வான் எத்தனை, மண் எத்தனை,
மதி எத்தனை, விண்மீன்
தான் எத்தனை, பரிதிக் கதிர்
தழல் எத்தனை, உலவாக்
கோன் எத்தனை, குடி எத்தனை,
குலவும் திரு எல்லாம்
மான் ஒத்தவள் முறுவற்கு ஒரு
விலை ஒத்தவை இவையோ!

வேறு

எண்ணிலாக் கண்கள் கொண்டங்கு
இமைப்பிலாது ஊழிக்காலம்,
கண்ணினுல், கருத்தால், மற்றைப்
புலன்களால் கண்டாரேனும்,
விண்ணெழில் யாவுமே ஓர்
மின்னலை மேவிற்று என்னப்
பெண்ணெழில் எல்லை காண்பார்
பேருலகு இல்லை இல்லை!

27

அந்தி மீன் மறையும் போதங்கு
ஆயிழை தன்னைச் சூழ்ந்து
சிந்துரப் பவளச் செவ்வாய்ச்
சேடியர் சிங்காரிப்பார்;
இந்துவைக் கழுவுவார் போல்
எழில் மதுக் கலவைச் சந்தச்
சந்தனப் பன்னீர் ஊற்றித்
தையலைக் கழுவுகின்ருர்.

28

முடிமிசை வீழ்ந்த பன்னீர்
மோக லாகிரியில் சிக்கிப்
படிமிசைப் பாதமட்டும் பாய்ந்திடும்;
பாய்ந்த பின்னர்,
கடிகமழ் தொட்டி ஒன்றில்
கவலையாய்த் தேங்கும், அன்னாள்
வடிவினை நிழல் கொண்டேனும்
வாஞ்சையாய்த் தழுவும் மாதோ.

29

பட்டினில் கருமை பூசிப்
பளபளச் செய்த கூந்தல்
சொட்டு பன்னீரின் துள்ளித்
துடைவரை தவழ்ந்து மேனி
தொட்டணைத்து இன்பம் கொண்ட
சுவையெலாம் நீங்கத் தன்னைக்
கட்டுவார் என்பதாலே
கண்கலுழ்ந்து அழுவ போன்ற.

30

பழகிய மாதரார்க்கும் படிவத்தைப்
பார்க்கப் பார்க்கக்
குழையுது நெஞ்சம் என்னின்,
குமரர்தம் நெஞ்சம் என்னும்?
விழைவினுக்கு எல்லை உண்டோ?
கணம்தொறும் வியப்புக் காட்டும்
அழகினுக்கு அவதி யாதோ,
அழகெலாம் ஒருங்கே கண்டால்?

31

ஆவியில் மென்பூத் தைத்த
ஆடையால் மேனி ஒத்திப்
பூவியல் நறுநெய் நீவிப்
புதுமணக் கதம்பத் தூளின்
ஆவியைச் சுருட்டி, ஆண்கள்
ஆவியைச் சுருட்ட என்றே
சீவிஅக் குழலைப் பின்னித்
தினகரன் வைரம் வைத்தார்.

32

கருமுகில் திரளின் கூந்தல்
கதிர்விடு வகிட்டு மின்னல்
திருநுதல் நிலவின் கீற்றுச்
செவ்வியில் விரியும் பட்டில்
கருநறும் சாந்தம் தீட்டிக்
கனகச் செம் மணிப்பொட் டிட்டுப்
புரியிருள் மதன்வில் போலும்
புருவத்தைப் புனைதல் செய்தார்.

33

செவ்வரி அமுதக் கீரல்
செறி மதுக் கடலில் ஜோதி
கவ்விய வண்டு வீழ்ந்து
களிப்புற நீந்துமாப் போல்,
வவ்வி ஓர் உவமை யின்றி
வலக்கணுக்கு இடக்கண் கூறும்
நவ்வியல் விழியில் மையாம்
நஞ்சினைத் தீட்டிவிட்டார்.

34

கன்னத்துச் சுழியில் காமக்
கற்பகக் கொழுந்து தீட்டிப்
பொன்னொத்த பொடியில் சந்தப்
பூஇளந் தாது பூசி
மின்னொத்த முறுவல் ஜோதி
விளக்கிடும் பவளச் செவ்வாய்
அன்னத்தை, மதுவின் செந்தேன்
அமுதத்தை அமுதம் செய்தார்.

35

வானுறு மதியம் வெல்லும்
வையக மதியம் போலும்,
தேனுறும் அமுதச் செவ்வாய்த்
திருமுகம் கலந்து கொஞ்ச,
மீனினம் இரண்டு வந்தங்கு
இருபுறம் மேவிற் றென்னக்
கூனிடும் வள்ளைக் காதில்
கூரொளித் தொங்கல் வைத்தார்.

36

மகரயாழ் வளையுந் தோளில்
மன்மதன் நாளம் தூக்கிச்
சிகரமாய்ப் பதுமம் போலும்
திங்கள் வாண் முகத்தைப் பூக்கும்
தகரநேர் சங்கம் பொங்கும்
தந்தத்தால் கடைந்த கண்டம்
நிகரிலா மணிப் பூண் பூட்டி
நிரப்பினர் மறைத்தார் அந்தோ!

வேறு

மாம்பழம் ததும்பு செம்பொன்
மலைதிரண்ட கொங்கையில்
தேம்பொதிந்த குங்குமச்
செழுங் குழம்பு பூசினர்,
பாம்பிரண்டு நெளிவ் போன்று
பாயும் ரோம பந்தியில்
காம்பு கொண்டு கற்பகக்
கொழுந்து மின்னல் காட்டினர்.

38

உந்தியம் தடத்தில் இன்பம்
ஊறும் ரோம ரேகைகள்
சந்தினில் தவழ்ந்து பொங்கும்
சாகரத்து மையலைக்
கந்தமும், கத்தூரியும்,
கதம்பமும் கமழ்தரச்
சந்திரன் நிலாவை ஒத்த
சல்லடத்து மாட்டினர்.

39

துப்பிதழ் மடந்தை காம
சாகரம் துழாவவே
தெப்பமாம் இரண்டு செம்பொன்
செங்குறங்கு சூழ ஓர்
அற்புதம் கனிந்த பட்டின்
ஆடை கொண்டு மூடினர்;
எப்பதத்தும் யாவினுக்கும்
இனிமை காட்டல் ஆகுமோ?

40

பஞ்சினும் குழைந்த கஞ்ச
மலரினில் படைத்தவாம்
நஞ்சினும் கனிந்த நாட்ட
நாயகி பதங்களில்
நெஞ்சினில் கலக்க மின்றி
நித்திலத்து அணிச் சுடர்
வஞ்சியில் சுருட்டுவார்கள்
வன்மை என்ன வன்மையே!

41

அணிகள் யாவும் அழகுபெற்ற
அமுத மேனி அணைவதால்,
திணியும் இருளில் ஒளிசெய் வடிவு
தினகரற்கும் வாய்க்குமோ?
தணிவு சேரும் தழலில் இளமை
தழுவு ஜோதி பார்த்திடில்
பிணிகள் யாவும் முன் பின் என்று
பேசிடாமல் ஓடுமே!

வேறு

நிலவினை நிலவுசெய் நித்தில முறுவல்,
கலவியில் அமுதுகும் கனியிதழ்ச் செவ்வாய்,
உலையிடு மெழுகென உருகிய பார்வை,
குலவிய பந்துருள் கோமள விரல்கள்;

43

பொன்செய்த மணமலர் பொருவிய சுவையின்,
மென்பனி ஆடையுள் மின்னிய வடிவம்,
கன்னலில் இனியதோர் கவிதைசெய் பேச்சு,
இன்நலம் யாவையும் ஏந்திய வல்லி;

44

மின்னென, மானென, மயிலென மிளிரும்,
அன்னமென் நடைபயில் அணிதவழ் பதுமம்,
புன்னகை இளமதி பொழிகதிர் நிலவில்
கன்னல் வில்மதன் இளங் காலென உலவும்.

45

வண்ணவாய் மதுமலர் மலர்ந்துள சுவையில்
கிண்ணவாய் மணிமலர் கிறிசெய்த மதுவும்,
பண்அளாய் ரசமுறு பல கனி, இவைதாம்
உண்ண வாய் ஊட்டுவர் ஓதிமம் அனையார்.

46

மணிவட மலரணை ஊசலில் ஊசல்
தணிவொடு பழகிட, சாமரை வீச,
திணிஇருள் மயங்கிய திங்களில் தென்றல்
பணிசெய் வீணையின் பண்ணுடன் ஆடும்.

47

ஒளியலை தாங்கிய ஓதிம வடிவில்
களிபெறு பஞ்சணை கமலமெல் இதழில்
கிளியொடு குயில்களும் கின்னரம் பாட
மிளிர்அமுது அனையவள் மேவியங்கு அமர்ந்தாள்.

48

என்றுமோர் இயல்பினில் வழிவழி யேகும்
நன்றியில் பொன்விலை நசைபடு வாழ்வின்
வென்றி நல் அமுதிடை விடம் இசைவதுபோல்
இன்றவள் நெஞ்சில் ஓர் துளி துயர் இலகும்.

49

மூச்சொன்று அங்கு உள்ளுறும் மோகத்துக்
[கருமை
பாய்ச்சிய களரிடைப் படிந்தத ஞலோ

வீச்சொன்றில் மார்பகம் வெடித்திடப் பாய்ந்து
தீச்சுடர் போல வெம் தீயொடு விசிறும்.

50

தேன் தெவிட்டிடச் செயும் தேன்மொழி வாயள்
தான் தெவிட்டில தரும் தழல்மதுக் கலவி
மீன் தெவிட்டிடச் செயும் மின்னெனத் தன்னைத்
தான் தெவிட்டிட மனம் தயங்கினள் மயங்கும்.

வேறு

ஐயமுற்றனள் பெண் மேரி,
யாதெனத் தெரியாள், நெஞ்சம்
தொய்யலுற்று எதையோ எண்ணும்
துயரினுள் மயங்குகின்ருள்;
மெய்யெலாம் தளர்ச்சி காட்ட
வெறுத்தனள் காமம் என்னும்
பொய்யினல் செய்த இன்பப்
புணர்ச்சியை மறந்தாள் மாதோ.

52

புலர்ந்துமே புலராப் போழ்தாங்கு
அலர்ந்துமே அலராப் பூப்போல்
மலர்ந்துமே மலராச் செவ்வி
மனத்திடை அயிர்த்தாள், காமம்
கலந்துமே கலவாக் காலைக்
கனவினுர் கதிர் போல் ஏதோ
நலங் தரும் எதுவோ ஒன்று
நங்கையைக் கவ்வி உண்ணும்.

53

பெண்ணெலாம் ஆண்மை வேண்டும்
பேரெழில் அமுதப் பெண்மைப்

புண்ணுலாம் காமப் புன்மைப்
புகையினுல் புகைந்த நன்மை
உண்ணுலாம் உயிரை யெல்லாம்
உருக்கும் ஓர் உணர்வில் தன்னைக்
கண்ணிலா நோக்குவாளாய்க்
கருத்திலாக் கருதுகின்ருள்.

54

ஆணெலாம் செல்வம் ஒன்ரு
யாவையுங் கொடுத்துப் புல்லும்
கோணிய வாழ்க்கை தந்தக்
குதுகலக் களரின் தீமை
பேணிலாள், ஆண்மை வென்ற
பெரியதோர் வீரம் குன்ற
நாணினுள் எனினும், நாணம்
நயந்திலாள் நயவா நின்ருள்.

55

வாசலில் குமரர் எல்லாம்
மாதராள் மயக்கத்தாலே
பூசலிட்டு ஒருவரோடங்கு
ஒருவரைப் பொருதும் காலை,
ஆசைவிட் டனளோ, அன்றி
ஆசையால் தியக்குற்ருளோ,
வீசுலை போல மூச்சு வெதும்பிட
வீணே சாய்ந்தாள்.

56

கிணற்றினில் ஆழ்த்து எங்கோ
கிளர்ந்தெழும் ஓசை போல், அங்கு

உணர்த்தி ஓர் செய்தி அன்னாள்
உயிரினுக்கு ஆழம் பூத்துத்
தணத்தணக் கொதிக்கக் காதுள்,
'காமத்தைத் தழுவேல்' என்று
குணத்தொளி செய்து மெல்லக்
குசுகுசுக் குலவிற் றம்மா.

57

உள்ளத்து மயக்கமோதான்!
உயிர்செயும் சாலமோதான்!
வெள்ளத்துப் பாயுங் காம
வியப்பினில் தெவிட்டலோதான்!
நள்ளிருள் நடுவே துள்ளும்
மின்னென நடுக்கும் செய்தி!
கள்இதழ் விளர்ப்பச் செவ்வாய்க்
கன்னியைக் கலக்கம் காட்டும்.

58

இன்னதென்று உரைக்கொணாது இவ்
வின்பமோ துன்பமோதான்,
அன்னவள் உயிரை அள்ளி
அலைக்கணுற் றிடச்செய் போதில்,
மின்னலின் திரளைப் போலும்
மேலவன் கருணை வீசி
முன்னி ஓர் வீதி எல்லை
முனையினில் வருதல் கண்டாள்.

வருகைப் படலம்

வானகம் இன்பத் திங்களின் நிலவால்
வணந்ததோர் வெண்குடை பிடிக்கும்,
மீனின மெல்லாம் தழைச் செய்த
மேலோன் மேனியை இமைப்பில நோக்கும்,
தேனக மலரின் கொத்தினுல்
தென்றல் சாமரை இரட்டுவ திரியும்,
மோன மாதவரும் முத்தரும் புகழும்
முதுகழற்கு எவை பணி முயலா?

2

வீதியில் திகழும் விளக்கொளி யெல்லாம்
மேலவன் மேனியில் மறையும்,
காதலில் தேவன் கால்படக் கனிந்து
கனகமாய்த் தரையெலாம் காட்டும்,
யாதெனச் சொல்வேன்! மற்றவர் நிழல்கள்
அவர்செயும் பவத்திருள் போலாம்;
மாதவன் நிழலோ, இருள் தவம் புரிந்து
மலரடி வருடுவ தொக்கும்.

3

மலையெலாம் மந்த மாருதம் தூதாய்
மன்னவன் சேவடி பணியும்,
கலையெலாம் அவன் வாய் மலரினில் புகுந்த,
கருணையோ அவன் கணில் கனிந்த,
விலையிலாக் காதல் அன்பெலாம் அவன்தன்
விரிநிலா முறுவலில் மலர்ந்த,
அலையெலாம் அன்று நுரைமலர் சொரிந்தங்கு
அருட்பதம் தாங்கிய அண்ணல்.

4

கண்ணிலார்க்கு எல்லாம் கண் அவன்; செய்ய
கருத்திலார் கருத்து அவன் கனிவே,
புண்ணுளார்க்கு எல்லாம் மருந்தவன் புண்கள்,
பொறியிலார்க்கு அவன் பொறி புகலாம்,
விண்ணிலார்க்கு எலாம் விண் அவன், துயரம்
வீழ்ந்தவர்க்கு அவன் விழல் உயர்வு.
மண் உளர் வாழ்க்கை அவன் சுடர் மரணம்,
மற்றவர் சுகம் அவன் மேனி.

5

இருளினைக் கீறி அருணன் வந்தெய்தும்
இளவெயில் சுடர் அவன் வடிவம்,
மருளினில் சுருளும் புகையிலாத் தழலின்
மலர் அவன் மதிதவழ் முறுவல்,
அருளினில் பரந்தங்கு அன்பலை விசிறும்
ஆழியில் பூத்திடும் கண்கள்,
தெருளிலாத் தீமை யாவுமே அவன் முன்
தீப்படு பஞ்செனத் தீயும்.

6

அழகெலாம் பெற்ற அழகினுக்கு அழகாய்,
அமுதெலாம் அமுதுசெய் அமுதாய்,
விழைவெலாம் தீர்க்கும் விழைவதாய், அன்பின்
விளக்கெலாம் விளக்கிய விளக்காய்,
பழகினுல் புளிக்கும் சுவையலாது என்றும்
பழகிடப் பழகிடப் புதிதாய்க்
குழைவெலாம் தோற்றிக் குறைவிலா நிறைவில்
கோமளம் காட்டும் ஓர் குமரன்.

7

தோளினில் தொங்கித் தாளினில் தவழும்
தூய வெள் ஆடை ஒன்றுடையான்,
வேளினில் தெய்வ வியப்பெலாம் காட்டும்
மேனியில் வேறணி அணியான்,
நாளொடும் பூத்த நறுமலர் வாயில்
நல் அமுதனைய மென் சொல்லான்,
பாழிடம் தன்னில் பார்வையால் கருணை
பாய்ந்திடச் செய்திடும் பரமன்.

8

தெய்வம் ஒன்றுளதாம் கோயிலில் எங்கோ,
திருவெலாம் பொன்னெலாம் அதற்கே
பொய்வகைக் குருக்கள் மூலமாய்த் தந்தால்
புண்ணியன் புண்ணியம் தருமாம்!
இவ்வகை மனிதர் தமை யெலாம் ஏய்த்தங்கு
இருப்பவரைக் கசை கொண்டு
நையவே புடைத்துப் புறத்தினில் ஓட்டி
நலஞ் செய்தான் நாதன் வந்தடைந்தான்.

வேறு

மேகம் யாவும் ஓர் மின்னலில் கால் கொளும்
தாகம் தீர்க்கும் கருணையின் சாகரம்
நாக நஞ்சினை நல்அமுதாக்கிடும்
வேகம் நீங்கிய மெல்லலை மெல்லுரு.

10

கஞ்ச முற்ற கனகக் கனல் ஒளி
விஞ்ச லுற்றவன் மேனி விளக்கினில்
பஞ்சை யுற்ற பவத்திரள் விட்டிலில்
தஞ்ச முற்றுத் தழலுறச் சாகுமால்.

11

கண்ணைக் கூசும் கவின்ஒளிக் காதலன்,
விண்ணைப் பாய்ச்சிய மெல்அமுதச் சுவைப்
பண்ணை ஊற்றும் பசுந்தமிழ் நெஞ்சினன்,
மண்ணில் ஞானத்து வாரி வழங்குவான்.

12

விண்ணும், மீனும், விரிகதிர் யாவையும்
பண்ணும் தேவன், பதுமப் பதங்களை
மண்ணில் ஊன்றி, ஓர் மாயத் துறவிபோல்,
நண்ணல் உற்றனன் நல்லருள் பூப்பவே.

13

காரைக் கண்ட பயிரின் கதிர் என,
நேரைக் கண்டதும் நெஞ்சில் தலைவனின்
சீரைக் கண்டு சிவந்த தண்ணீர் என,
ஊரைக் கொண்டது உவகையின் வெள்ளமே.

14

சங்கம் ஊதினர், பேரிகை சாற்றினர்,
பொங்கும் பன்னீர் இறைத்தனர், பூமழை
எங்கும் கொட்டினர், இல்லம் விளக்கினர்,
மங்கலங்கள் வழங்கினர் மாதரே.

15

தயிரில் மத்துறு சஞ்சல நெஞ்சினர்
உயிரை மேவும் உடல்களில் சூழ்ந்தனர்;
அயர்விலாமை அவரவர்க்கு அன்னவர்
பயிலுமாறு அவன் போதனை பாய்ச்சினன்.

16

பூத்தது இன்னுரை, பூத்தது இளநகை,
பூத்தது அன்பினில் போதவிழ் பொன்மலர்,

பூத்தது எங்கணும் புண்ணியம், மேலவன்
பூத்த ஞானப் புனிதம் வந்து எய்தவே.

17

அன்னவன்தன் அருள் உருப் பூத்தழல்
முன்னும் வீதி முனையினில் பொங்கவே,
கன்னி மேரியும் கண்டனள், கண்டனள்!
பின் நிகழ்ந்த பெருமை என் சொல்லுவாம்!

வேறு

கண்டனள் விழித்தாள் மேரி,
காட்சி மற்று எவையும் காணுள்,
உண்டதோர் மயக்கக் காமத்து
உவரிநீர் மேனி யெல்லாம்
விண்டது, வியர்வையாகிக் கழிந்தது,
வேறு ஜன்மம்
கொண்டவள் போல, வெண்பொன்
கோமளப் பாவை நின்ருள்.

19

தீச்சுடர் கலவிப் புன்மைப்
புகையினுல் தீய்ந்த நெஞ்சம்
காய்ச்சிய வஞ்சமெல்லாம்,
கவடெலாம், சூழ்ந்து பொங்கும்
நீச்சினுக்கு எட்டாக் காமச்
சூறை, ஓர் நீண்டு விம்மும்
மூச்சினில் வெளிப்பட்டு ஓட,
மூர்த்தியை மூர்த்தம் செய்தாள்.

20

கழித்திடும் காமம் கண்ட
காளையர் தம்மை வாட்டிப்

பழித்திறன் பாயும் பாவைப்
பார்வை, தன் சலனம் நீங்கி,
அழித்தலைக் கள்ளின் வாரி
அமுதமாய் நிரம்பினாற் போல்
விழித்த கண் விழித்தவாறு
வேறுள நோக்கா நிற்கும்.

21

கடவுளைக் கண்ட ஞானக்
களிப்பினைப் பெரியது என்கோ?
மடமையில் செய்த பாவ
வருத்தமே பெரியது என்கோ?
விடமுற வெதும்பும் காட்சி
வியப்பினில் மகிழும், பின்னும்
திடமிலா வெதும்பும், திக்கை
வெறித்திடும், திகைக்கும், சோரும்.

22

சின்னதோர் கொடியில் தொங்கும்
வேர்ப்பலாச் செறியும் பாவப்
புன்மையோர் பொருப்பர்த் தோன்றிப்
பூவையை அழுத்தச் சாம்பித்
தன்னையும் தாங்க லாகாத்
தளிரினில் குழையும் பாவை
அன்னம் ஓர் பதுமம் புக்கது
அனையளாய் அணையில் சாய்ந்தாள்.

23

தோழியர் தம்மைப் பாராள்,
தோய்மதுக் கீதம் கேளாள்,
நாழிகைக்கு ஒன்றாய்த் தன்னைப்
புனைந்திடல் நயவாள், பின்னும்

ஆழியின் திரையைப்போல் அங்கு
அலேபவர் தம்மைப் பேணுள்,
பாழிடம் தன்னைச் சும்மா
உற்றுற்றுப் பார்க்கின்ருளால்.

24

தன்னிலே தாஞய்த் தன்னந்
தனியளாய், தழலில் காய்ச்சும்
துன்னிய பாவ மூட்டை
அல்லதோர் துணையற்ருளாய்,
என்னெனச் சொல்வது ஐயோ,
ஏந்திழை துயரக் கோலம்!
மன்னும் இவ்வையம், வானம்,
மற்றெல்லாம் உருகும் சேதி.

25

காமுகர் காமம் எல்லாம்
கைவசம் கண்ட காமத்
தீமையே வடிவாய்க் கொண்ட
திருவினைத் தாங்கித் தாங்கிப்
பூமலர் அமளி பெற்ற புன்மையால்
பொருமிப் பொங்கித்
தாமரை முள்ளேப் பூத்த
தன்மையில் தைத்த மாதோ.

வேறு

தாக மிஞ்சிய சண்பகக் கொடி
தழலில் இட்டதோர் தன்மையில்
வேக மிஞ்சிய பாவ நஞ்சின்
வெறிகொள் நெஞ்சம் கருகவே,

மோக மிஞ்சிய லாகிரிச் சுவை
மோகனச் சுடர் போன்றுளால்
தேகம் அஞ்சித் ‘ தழுவிடேன் ’ எனச்
சேலையும் கழன்று ஓடுமாம்.

27

பூணெலாம் அவள் மேனி எங்கணும்
புண்ணுறச் செய் விலங்குகள்,
காணும் பார்வையும் காமம் காண்கிலாக்
கண் சொருகிக் கலங்குவ,
பாணி அன்னவள் பாவம் சூழ்ந்த
பழியில் சோர்ந்து படுத்தவாம்,
வாணிலா நகை இன்பத் தேன் இதழ்
வாய் வெளுத்து வரண்டுபோம்.

28

புரியைப் போலப் புரண்டு விம்மிப்
புடைத்த நாடி நரம்புகள்
திருவைப் பின்னிப் பிணத்து நல்உயிர்
சேரத் தீரச் சிதைப்பதாம்,
கருமைக் காரிருள் நீழலும் தனைக்
கருமை செய் பவம் அஞ்சியே
விரியு நாற்புரம் கோடி கோடி
விளக்கொளிக்கண் மறைந்துபோம்.

29

கிள்ளை காமம் கிளுகிளுத்துப் பெண்
கிள்ளையைக் கீச்சிக் காட்டுமாம்,
உள்ளமோ ‘வெடிப்பேன்’ எனுத் தன்
உயிர்ப்படங்கிப் புழுங்குமாம்,
அள்ளு மேனி அழகு காட்டித் தம்
அன்பு காட்டுக் கண்ணடிகள்

நள் இருண்ட முகத்தைக் காட்டிப் பின்
நங்கு காட்டுவ போன்றன.

30

சாளரத் திரைச் சேலை யாவுமே
சாலை போந்திடும் வாலிபக்
காளையர் தமை 'வாரும்' என்று கை
காட்டிக் கூப்பிடல் போன்றன,
ஆள் அரம்பையர் யாவருக்கும்
அரம்பை பாவம் உணர்ந்தனள்,
'மீளும் போம்' என மின்னி மின்னி
வெருட்டல் போலத் துளங்குவ.

31

வன்னம் தீட்டி மயக்கம் காட்டி
வனைந்த சிற்பச் சிலையெலாம்
மின்னும் ஜோதிச் சுவரில் மேவிய
ஓவியத்தின் வியப்பெலாம்,
அன்னம் மெல்நடை மெல்லியாள் பவத்து
ஆழி கண்ட மயக்கினால்
இன்னலுற்றங்கு உயிர்ப்படங்கி
உன்மத்தமுற்றவை ஏய்ந்தன.

32

தேனைத் துள்ளி அங்கு அள்ளி வீசிய
தென்னல் இன்று சினத்தினால்
மீனில் துள்ளிய கண்ணினாள் பவ
மிகுதியைக் கண்டு மீறியே
வானில் துள்ளி இவ் வையம் துள்ளிய
கனலெலாம் வாரி வாரி அக்
கானில் துள்ளிக் களைத்து மேரி
கலங்குறத் துயர் காட்டுமே.

33

பூவெலாம் பவப் பூவை காணப்
பொறுக்கிலாது இதழ் மூடுமாம்,
காவுலாவிய புள்ளெலாம் தங்கள்
கண்மயங்கி உறங்குமாம்,
ஓவிலாது அவள் செய்த தீமை
உலகம் எங்கும் இருள் என
மேவித் தம்மை விழுங்கும் என்ன
விளக்கினங்கள் மினுக்குமாம்.

34

திங்கள் என்னும் விளக்கம் ஏந்தித்
திணிந்த காரிருள் நீங்கவே
கங்குல் கன்னியும் வந்தடைந்தனள்,
தன்னைப் போல் ஒரு காரிகை
பொங்கும் தீமைப் புகை சுருட்டப்
பொருமுவாள் துயர் காண்கிலா,
மங்கி நாணி மயங்கித் தன் கை
மதி விளக்கை மறைக்குமாம்.

35

மீனம் யாவையும் கண் சிமிட்டி
மினுக்குக் காட்டிச் சிரிப்பன,
வானம் எங்கணும் மேகம் மூடின,
வையம் காரிருள் மூழ்குவ,
ஞான நாயகன் ஏசு வந்திட
நங்கை உண்ட பவத்திரள்
ஈனம் யாவும் வெளிப்படும் பொழுது
யாவையே இருளாதவே!

வேறு

தன்னுடைய பாவம்
தரணியெலாம் சூழவதுவோ,

மின்னிடையாள் பாவத்தை
மேதினிதான் வெறுப்பதுவோ,
என்னுடையாள் தீமைக்கண்
ஈட்டு பவம் அல்லாமல்
மன்னுடைய மாதேவன்
மலரடிக்கண் வார்த்திடவே.

37

விம்முகின்றாள், வியர்க்கின்றாள்,
வெப்பத்தால் வெதும்புகின்றாள்,
பொம்முகின்றாள், பொருமுகின்றாள்,
பொங்குகின்றாள், புகைகின்றாள்.
மம்மருறும் காம
மயக்கத்துச் சூழலிலே,
அம்மம்ம, அவள் துயரம்
யார் உரைக்க வல்லாரே!

38

பெண்ணீர்மை எல்லாம்
பிழைபோகக் கண்டவளை,
புண்ணூரும் நெஞ்சத்துப்
பெரும் பாவம் பூண்டவளை,
கண்ணீரும், கம்பலையும்,
கவலைப் பெருமூச்சும்,
தண்ணீராய்க் காமத்
தழல் நீராய்த் தாம் உருக்கும்.

39

விழுந்து விழுந்து எழுந்து எழுந்து
வெய்யிலிட்ட புழு என்னக்
கொழுந் தழலின் மெழுகு என்னக்
கொடி என்னக் குழைகின்ருள்;
தொழுந்தகைய சுடர் மேனி
துவண்டு துவண்டு அலை புரள
அழிந்தழிந்து மதி மருண்டு அங்கு
அலை கடலாய் அரற்றுகின்ருள் :

40

ஆண்களிலே, பெண்களிலே,
அலிகளிலே, யாவரிலே
பேணும் இன்பப் பேரழகு
பெற்றதனைக் காசுக்காய்க்
காணுமவர் யாவருக்கும்
கைவசமாய்ச் செய் புன்மைப்
பூணுடையார் என்னைப் போல்
புவியின்மிசை வேறுளரோ ?

41

' உண்பதுவும், உறங்குவதும்,
உடுப்பதுவும், காளையரைக்
கண்மயக்கால் வாட்டிக்
கலப்பதுவும் அல்லாமல்,

பெண் பயந்தான் வேறில்லையோ ?
பிழையன்றோ ? பேதையினேன்
கண் குருடராய்க் காமக்
கருக்கலிலே வாழ்ந்தேனே !

42

'முடுவல் ஒன்றங்கு, அதை வீதி
முனைவரையில் தொடர்ந்து செலும்
கடுகுரல் நாய்த் திரளதனைக்
கணக்கெடுப்பார் யாவருளர் ?
படுகரிலே, காமப் பழியினிலே
பாழ்த்த எனைத்
தொடுவதற்கும் சூழ்வதற்கும்
தொல்லை செய்வார் எல்லையிலார்.

43

'நாணில்லேன், நடுங்கில்லேன்,
நலமில்லேன், தீமையுறக்
கோணில்லேன், குழைகில்லேன்,
கொடுமையெலாம் கைவந்தேன்,
ஆணுள்ளார் யாவரையும்
பேடியராய் ஆக்கிவிட்டேன்,
பேணும் இந்தப் பெரும் பாவப்
பிழைதீர்க்க வல்லேனோ?

44

'அறிவறிந்த நாள் முதலாய்
அன்று முதல் இன்று வரை

பிறிதறியேன்; காமப்
பெருஞ் சூதும், வஞ்சனையும்,
நெறிஅறியாக் காளையரை
நெறிக்கிப் பொன் பறிப்பதுவும்,
குறிஅழியக் கலவியிலே
கோப்பதுவும் அல்லாமல்.

45

'குலமகளாய்ப் பிறந்தும் எந்தன்
வறுமையுறும் கொடுமையினால்
நலம் இழந்தேன், காமம் எனும்
நஞ்சுண்டேன், நானிலத்தில்
விலைமகளாய், புலைமகளாய்,
வெறுமகளாய்க் கழிந்தேற்கும்
அலைமகள் சேவடி தாங்கும்
அண்ணல் அருள் வாய்த்திடுமோ?

46

'வானகமே! மண்ணகமே!
மற்றகமே! மாவிதியே!
மோனகமா முனிவர்களே!
தேவர்களே! மும்முதலே!
ஈனமுறும் காமத்தால்
எழில் குறைந்த என் உயிரைத்
தீனமுறச் செய்யச்
சிறிது வழி காட்டீரோ?

47

'தந்தையரே! தாயே!
தமியேனைப் பெற்றெடுத்த
முந்தையரே! பள்ளி
முதியவரே! நீவிரெல்லாம்
சந்தனத்தைச் சேற்றுச்
சதுகரிலே ஊற்றுவ போல்
எந்தனையே புன்மைக்கு
இரையாக்கி விட்டீரே!

48

'சந்திரனே! சூரியனே!
கண்சிமிட்டும் தாரகையே!
அந்தரத்து வானத்து
அலைகின்ற மாமுகிலே!
இந்த உலகத்து இயற்கை
யாவையுமே காண்கின்றீர்!
எந்தனைப் போல் பாவி
எவரேனும் கண்டுளிரோ?

49

'கூனிடுவாய், குறைந்திடுவாய்,
கொடுங் கறுப்புக் களங்கமுளாய்,
மீனம் எல்லாம் நகைசெய்ய
விரி அரவின் வாய்ப் படுவாய்,

வானுறுவாய் என்றாலும்,
வான் மதியே! என்னைப் போல
ஈனமுறும் தொழில் செய்தே
இவ்வண்ணம் ஆனாயோ?

50

'ஓயாது உருண்டுருண்டே
உலைகின்ற மாமுகிலே!
தீயான மின் வாளால்
தினம் செகுக்கப் படுகின்றீர்!
பேயான பேராசைப்
பேரிடியால் குமைகின்றீர்!
ஆயாது எனைப் போல
யாதேனும் செய்தீரோ?

51

'பொங்கிக் குமுறிப்
புடைபுடைத்துப் போராடி
எங்கெங்கும் பாய்ந்தே
இடிபோல் குரல் எழுப்பிச்
சங்கடத்தால் அலையும்
சாகரமே! என்னைப் போல்
பங்கமுறும் செயலால்
இவ்வண்ணம் பட்டாயோ?

52

'வண்டு தரும் தூசி
மகரந்தப் பொற் காசைக்
கண்டு வந்து மலர் மகளின்
கள்விற்கும் கான் மரமே!
தொண்டை வாய்க் கள் விற்கும்
எனைப்போலச் சூழ்ந்ததனால்
திண்டு முண்டாய்ச் சூறைத்
திசைக் காற்றில் ஆடுதிரோ?'

53

என்று அழுங்கும் வேளையிலே
ஏசுவெனும் மாதேவன்
நின்ற நெடுந் தெருவே
நெடுந்தூரம் போய்விட்டான்;
மின் தவழ் மெல் இடை நோவ
வெறும் வீதிதனைக் கண்டு,
ஒன்றுரையாள், உணர்வழிந்தாள்,
உலகெல்லாம் மறந்தாளே.

54

துள்ளினாள், பாய்ந்தாள்,
துடித்தாள், ஒரு கணத்தில்

வெள்ளிடையே வந்தாள்,
வீதிவழிப் போகின்றாள்:
நள்ளிரவில் பூக்கும்
நன்மதி போலே உயிரை
அள்ளும் ஒரு பேரமைதி
அவனியெலாம் சூழ்ந்ததுவே.



வங்கக் கவிஞர்
ரவீந்திரநாத் தாகூரின்

கீதாஞ்சலி

தமிழாக்கம் :

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

ஆங்கிலம், ஸ்வீடிஷ், டேனிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, டச், இத்தாலியன், ரஷியன், ஜெக், ஸ்பானிஷ், ஜிட்டிஷ், ஹீப்ரு, கிரீக், போர்ச்சுகீஸ், எஸ்டோனியன், ஹங்கேரியன், முதலிய மொழிகளில், தாகூரின் கவிதைப் பொக்கிஷங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழனும் 'கீதாஞ்சலி' அமிர்தத்தை அருந்த வேண்டுமென்ற நோக்கத்துடன், மிக மிக நுட்பமாக மூலத்தின் சுவை மங்காது, திரு. வி. ஆர். எம். செட்டியார், ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவி, தமிழாக்கித் தந்திருக்கிறார்.

விரைவில் வெளிவரும் !

விலை ரூ 2—8—0

....

முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு, தபால் செலவின்றி புத்தகம் அனுப்பப்படும். மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடுவதால், பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுவது நலம்.

எங்கள் அரிய இனிய இலக்கிய வெளியீடுகள்

1.	கிளிக்காதல்—பண்டித ரத்னம்	ரூ. 0	8	0
2.	சிறை அனுபவம்—ஆஸ்கார் ஒயில்ட்	1	4	0
3.	சிறந்த சிறு கதைகள் — ,,	1	4	0
4.	ஒற்றையங்க நாடகங்கள் — கே. ஸ்ரீநிவாஸ் பி. ஏ.	0	12	0
5.	தாகூரின் கவிதைக்கனி—மணிவாசகம்	0	12	0
6	கவிதை, கலை, விமர்சனம் — சுப. நாராயணன்	2	0	0
7.	'கல்வி' முதலிய கட்டுரைகள் — வே. சாரநாதன் எம். ஏ.,	1	6	0
8	'சலோம்' அல்லது குமரியின் சபதம்— நாடகம் — ஆஸ்கார் ஒயில்ட்	1	0	0
9.	'அசோகவனம்' — ஆ. முத்துசிவன் பி. ஏ. (Hons)	2	8	0
10.	'நட்சத்திரக் குழந்தை' முதலிய கதைகள் மூன்று ஆசிரியர்கள் கிளேஸ் பதிப்பு	1	4	0
	ஆண்டிக்பதிப்பு	1	8	0
11	கட்டுரைக் கரும்பு — வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.,	2	0	0
12.	புராதன நாகரிகம்-அ. ராமய்யர் எம். ஏ.	1	4	0
13.	'இந்திரா' முதலிய நாடகங்கள் — கே. ஸ்ரீ. பி. ஏ.	2	0	0
14.	'மல்லிகை' முதலிய வங்க நாடோடிப் பாட்டுக் கதைகள்	2	8	0

இனி வெளிவரும் நூல்கள்

15. கவிஞன் ஷெல்லி எழுதிய 'செஞ்சி' நாடகம் தமிழாக்கம்: வ. ரா.

16. "சோகப் பாலம்" முதலிய பாடல்கள் — தமிழாக்கம்—திருலோகசீதாராமன் பி. கோதண்டராமன் எம். ஏ. பி. எல்.

17. தாகூரின் 'கீதாஞ்சலி' தமிழாக்கம்: வி. ஆர். எம். செட்டியார் 2 8 0

மல்லிகை

முதலிய வங்க நாடோடிக் கதைகள்

பி. கோதண்டராமன் எம். ஏ., பி. எல்.

விலை ரூ. 2—8—0

★

"இந்திரா"

முதலிய நாடகங்கள் :

கே. ஸ்ரீ

விலை ரூ. 2—0—0

STAR PUBLICATIONS

Palakarai :: Trichinopoly

எங்கள் இதர வெளியீடுகள்

அசோகவனம் விமர்சனம் ஆ. முத்துசிவன்	ரூ 2 80
'மல்லிகை' முதலிய வங்க நாடோடிக் கதைகள்	2 80
குமரியின் சபதம் சோக நாடகம் ஆஸ்கார் ஒயில்ட்	1 00
தமிழ்க்குமரி—பாடல்கள் (2-வது பதிப்பு அச்சில்)	2 80